DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

Spl.SC.No.56/2024 & Spl.SC.No.57/2024

PROSECUTION WITNESS No - PW- 1

| | | | |
|---|---|---|---|
| Name : | தனசேகரன் | Caste: | |
| Father Name | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09th day of February 2026.

எதிரி நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்.

<u>முதல் விசாரணை :</u>

நான் தற்போது திருப்பாச்சேத்தி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். ஆஜர் எதிரி பிராகரன் என்பவரை எனக்கு தெரியும். கடந்த 2020 ம் ஆண்டில் மானாமதுரை சிப்காட் காவல் நிலையத்தில் 2 ம் நிலை காவலராக பணியாற்றிய போது கடந்த 24.08.2020 ம்தேதி ரோந்து பணிக்காக நான் எங்கள் நிலையத்தைச் சார்ந்த கணேசன் என்ற காவலரும் செய்களத்தூர் பகுதியில் சென்றபோது எங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி செய்களத்தூர் சின்னகண்மாய் ஐய்யனார் கோவில் அருகில் மணல் அள்ளுவதாக தகவல் வந்தது. நாங்கள் இருசக்கர வாகனத்தில் சென்ற போது எதிரே TN63L0067 என்ற எண் கொண்ட டிராக்டரும் அதனுடன் TN63L1883 என்ற பதிவெண்ட கொண்ட டிரெய்லரும் வந்து கொண்டு இருந்தது. அந்த வண்டியில் சுமார் 1 யூனிட் சவடுமண் இருந்ததால் வண்டியை நிறுத்திய போது ஆஜர் எதிரி பிராகரன் என்பவர் எங்களை கண்டதும் ஓட முயற்சித்தார் நாங்கள் அவரை பிடித்து வண்டி, டிரெய்லர் மற்றும் மண்ணுடன் எதிரியையும் மானாமதுரை சிப்காட் காவல் நிலையம் கொண்டு வந்து நான் ஒரு புகார் ஒன்று கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான்.

மேற்படி புகார் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது குறித்து ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>**குறுக்குவிசாரணை:**</u> இல்லை.

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.02.09 16:25:41 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை